1968 மார்ச் 27]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே நான் குறிப்பிட்டது போல, மதுரை நகராட்சி மன்றம் அரசாங்கத்தின் கவனத்திற்கு எந்த விதமான குற்றச்சாட்டுகளையும் கொண்டுவரவில்லை. கனம் உறுப்பினர் குற்றச்சாட்டுகள் ஏதாவது இருந்து, அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

உயர்நிலைக் குழுவின் அறிக்கை

* 322 வினு.—திரு. கரு. சீமைச்சாமி:
திரு. கே. வினயகம் :
திரு. வி. கே. கோதண்டராமன் :
திரு. ஆ. கு. சுப்பையா .
திரு. க. இராமமூர்த்தி :
திரு. என். சங்கரய்யா :
திரு. எ. சிதம்பரநாத நாடார் :
திரு. க. கோமதிசங்கர திட்சிதர் :
திரு. சி. கோவிந்தராசன் :
} மாண்புமிகு

முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கும் உயர்மட்ட கமிட்டி (High Power Committee) அளித்திருக்கும் பரிந்துரைகளின் விபரங்கள் யாவை ?

(இ) அவற்றுள், எத்தனை பரிந்துரைகள் இதுவரை செயலாக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) & (இ) இது பற்றி சபைமுன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, சிக்கன-நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக் குழு குறிப்பிட்ட 13 பரிந்துரைகளைச் சொல்லியிருக்கிறது. அவைகளில் எதை எதை அரசாங்கம் ஏற்று நடத்தியிருக்கிறது ? இதனுல் நிர்வாகச் செலவு எவ்வளவு மிச்சமாகியிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : விரிவான அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கின்ற பரிந்துரைகளில் எவை எவைகளைச் செயல்முறைக்குக் கொண்டுவர முடியுமோ, அவைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஈடுபட்டிருக்கிற தென்பதையும், இனியும் ஈடுபடும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, since the subjects considered by the High Power Committee are so important and the remedies suggested by them are also very revoluntionary in character and since the Government have partially accepted those recommendations for execution, will the Chair be pleased to allot half-hour for discussion on this matter?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேளுங்கள்.

[a] 333-360-ம் பக்கங்களில் I,I-அ இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Sir, in response to the suggestion of the Hon. Deputy Speaker, I will put a question. May I know what is the experience of this Government after adopting the recommendations of the High Power Committee and what is the useful purpose those recommendations have served so far?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the hon. Member cannot expect the Government of one year's standing to have any rich experience. We are getting experience.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, விவர அறிக்கையாக ஒரு புத்தகம் தரப்பட்டிருக்கிறது. இதைக் கொஞ்சம் ஒரு நாள் முன்னதாகக் கொடுத்தால் படித்துப் பார்த்து கேள்விகள் கேட்க நலமாக இருக்கும். இந்தப் புத்தகத்தின் 22-வது பக்கத்தில், இக் குழு இதுவரையில் செய்துள்ள பரிவுரைகளினால் 9 இடங்களிலும் சேர்த்து மிச்சமாகும் என எதிர்பார்க்கப் படும் தொகை ரூபாய் 1 கோடியே 5 லட்சம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதை இந்த அரசு ஏற்றுக் கொண்டு விட்டார்களா? இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டதா? அப்படி நடைமுறைக்குக் கொண்டுவராவிட்டால் காரணம் என்ன? ஏன் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை என்பதைக் குறித்து இந்த அறிக்கையில் ஏன் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு முறை ஒரு கேள்விதான் போடலாம். நீங்கள் ஒரு முறையில் எத்தனை கேள்விகள் போடுவது?

திரு. வி. கே. கோதண்டராமன்: நீங்கள் ஒரு முறைதானே சந்தர்ப்பம் அளிக்கிறீர்கள். குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டால் 1 கோடியே 5 லட்சம் ரூபாய் மீதமாகும் அல்லவா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தலைவர் அவர்களே, நண்பர் 22-வது பக்கத்தைப்பற்றிச் சொல்வதற்கு முன்னால், 21-வது பக்கத்தைப் பார்த்திருந்தால் விவரம் தெரியும். 21-வது பக்கத்தில், "குழுவின் மேற்சொன்ன பரிவுரையை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் 1966, மார்ச் மாதம் 1-ம் தேதி முதற் கொண்டு இவ் வேலைத் திட்டத்தை விட்டுவிடுமாறு ஆணையிட்டுள்ளது. இதனால் அரசாங்கத்துக்கு ஆண்டு ஒன்றுக்கு 35 ஆயிரம் ரூபாய் மிச்சமாகும்" என்று சொல்லியிருக்கிறது. சில பரிவுரைகளை அமல்படுத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. சு. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டியினுடைய ரிப்போர்ட் புரட்சிகரமான மாற்றங்களைச் சுட்டிக் காட்டி, சிறப்பு செய்திருக்கிற காரணத்தால், தொடங்கிவிட்ட சிபாரிசுகள் நீங்கலாக, மற்ற சிபாரிசுகளை அமல்படுத்துவதற்கு முன்பாக இந்த அரசு எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்குமா?

1968 மார்ச் 27]

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: அது எனக்கு மிகவும் விருப்பமான காரியம். அதுபற்றி நான் ஆலோசிக்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: தலைவர் அவர்களே, இந்தச் சிபாரிசுகளை நிறைவேற்றுவதன் காரணமாக சாதாரண அரசாங்க ஊழியர்களுக்கு, வேலையிலிருந்து எடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டால், அந்த ஊழியர்களுக்கு மாற்று வேலைகள் கொடுக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: பொதுவாகவே, நிரந்தரமான முறையில் வேலையில் இருப்பவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், வேறு வேலைக்கு மாற்றப்படுவதும், வேலையிலே நீடித்து இருக்கும்படியான நிலைமையை உண்டாக்கித் தருவதும் தான் சர்க்காரின் கொள்கையாக இருந்து வருகிறது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்த 'ஹை பவர் கமிட்டி' செய்துள்ள சிபாரிசுகளில் முக்கியமானவைகளை உடனடியாக அமல் செய்தால் இந்த ஆட்சி முறை நல்ல முறையில் சீர்திருந்தும் என்ற காரணத்தால், இதை நன்கு கவனித்து உடனடியாக அமல் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: இதுதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அறிவித்தேன். மேலும் பல உறுப்பினர்கள் இதே முறையில் கேள்வி கேட்காமல் இருப்பதற்காக, அறிக்கையைப் படித்துக் காட்டுகிறேன். 1965-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சிக்கன—நிர்வாகச் சீரமைப்பு உயர்நிலைக் குழு ஒன்றை அரசு நிறுவியது. இக் குழு 1966 மார்ச் திங்களில் தனது தொடக்க அறிக்கையைப் பணிந்தனுப்பியது. இந்த அறிக்கை 1966 மார்ச் 29-ம் நாளன்று சட்ட மன்றத்தில் வைக்கப் பட்டது. தகுந்த பல தொடர்புடைய கருத்துரைகள் கிடைத்து இருக்கின்றன. அதை ஆராய்வதில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

மதுரை மாவட்டத்தில் அரசு ஊழியர்கள் குறைப்பு

* 323 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசாங்கத்தின் ஆள் குறைப்பு சிக்கன நடவடிக்கையின் காரணமாக எத்தனை அரசாங்க ஊழியர்கள், மதுரை மாவட்டத்தில் மட்டும் வேலை இழந்திருக்கின்றார்கள்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: எழுபத் தொன்று.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இந்த வேலை இழப்பு செய்யப்பட்டவர்கள் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள்? எத்தனை ஆண்டுகளாக வேலை பார்த்தவர்கள்? திரும்ப அவர்களை எப்போது வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படும்? அரசாங்கத்திற்கு இதனால் எவ்வளவு பணம் மிச்சமாகும்?